# ஆயர் மடல் ...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் திருநாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த ஆண்டில் கர்த்தர் தம் ஓங்கிய புயத்தினால் இம்மட்டுமாக நம்மை எவ்வித குறைவுமின்றி, பூரணமாய் வாழ்வின் அனைத்து நிலைமைகளிலும் தேவையான சமயங்களிலும் உதவிகளைச் செய்த ஆண்டவருக்கே மகிமை செலுத்துவோம். காலங்கள் கர்த்தரின் கரத்தில் இருக்கிறது தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும், நன்மைக்கு ஏதுவாகவே அமையும் என்ற உண்மையை புரிந்து கொண்டவர்களாய் இந்த புதிய ஆண்டில் தேவபெலத்தோடு ஒவ்வொரு பணிகளையும் செய்ய பிரயாசம் எடுத்து ஜெயத்தைப் பெற்றுக்கொள்வோம்.

கடந்த ஆண்டில் ஊழியத்தில் முழு அர்ப்பணிப்போடு பங்கெடுத்துக் கொண்டு கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்திய அனைத்து உள்ளங்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

6-1-2017 (வெள்ளி) அன்று உடன்படிக்கை ஆராதனையில் குடும்பமாக பங்குபெற்று தேவன் தரும் ஆசீர்வாதங்களை “நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்” என அறிக்கை செய்து பெற்றுக்கொள்ளுங்கள்.

27-1-2017 அன்று சபையின் குடும்ப இன்ப சுற்றுலாவில் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ள ஆயத்தப்படுங்கள்.

இந்த ஆண்டிலும் குறைகளை பார்த்துக் கொண்டே தேவமகிமையை இழந்து போகாதபடி, புதிய தீர்மானங்களோடு திருச்சபையின் உபவாசக் கூட்டம், பெண்கள் ஜெபக்கூகூடுகை, ஆண்கள் ஜெபக்கூடுகை, இளையோர் திருச்சபை ஊழியங்கள் அனைத்திலும் தேவபிரசன்னத்தை நாடினவர்களாய் இணைந்து செயலாற்ற ஆயத்தப்படுவோம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்

**அருள்திரு.சே.டேவிட்சன் பால் ஜேக்கப்**

தியானம்

# கர்த்தரில் மனமகிழ்ச்சி

*"கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய் ; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி , உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன் ; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று"* ஏசாயா 58 : 14

இதில் உள்ள 3 நன்மைகளை சிந்தித்து பிறகு அந்த நன்மைகளை அடையக்கூடிய வழிகளையும் தியானிப்போம்.

**1. நீ கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய் :**

உலகிலுள்ள எல்லா மனிதருமே தன்னுடைய வாழ்க்கையில் பெற்று அனுபவிக்க விரும்புகிற ஒரு காரியம் 'மகிழ்ச்சி'. ஆம். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியாயிருக்கவே விரும்புகிறான். ஆனால் நாம் வாழ்கின்ற இவ்வுலகிலே 'மனமகிழ்ச்சி' என்பது அபகரிக்கப்படுகிற ஒன்றாகவும் 'கவலை' திணிக்கப்படுகிற அல்லது பரிசாக அளிக்கப்படுகிற ஒன்றாகவும் இருப்பதைக் காணலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே வாழ்கின்ற நமக்கு கர்த்தர் அருளுகின்ற ஒரு உன்னத வாக்குத்தத்தம் , நீ மனமகிழ்ச்சியாயிருப்பாய். உன் மகிழ்ச்சியை பறிப்பதற்கு உலகம் செய்கிற எல்லா சூழ்ச்சிகளும் நிச்சயமாகவே உடைப்பட்டுப்போம்.

கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய் என்பது கர்த்தருடைய ஊழியத்தினை செய்வதால் உண்டாகும் மனமகிழ்ச்சியை குறிப்பதாகும்

**கர்த்தர் தரும் மனமகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வது எப்படி?**

கர்த்தர் தருகின்ற ஊழியத்தை உண்மையும் உத்தமுமாய் நிறைவேற்றும் போது கர்த்தர் மனமகிழ்ச்சியைத் தருகிறார். மத்தேயு 25ம் அதிகாரத்தில் தாலந்து உவமையிலே , ஒருவனுக்கு ஒரு தாலந்தும் ஒருவனுக்கு இரண்டு தாலந்தும் , ஒருவனுக்கு ஐந்து தாலந்தும் கொடுக்கப்படுகிறது. இரண்டு தாலந்தை பெற்றவன் அதைப் நான்காக , ஐந்து தாலந்தைப் பெற்றவன் அதைப் பத்தாக பெருகப் பண்ணியதைக் காணலாம். இவர்கள் தங்களுடைய எஜமானின் மன விருப்பதை அறிந்து உடனடியாக பணி செய்யத் துவங்குகிறார்கள். அப்போது கர்த்தர் '100 சதவிகித ஆசிர்வாதத்தையும் , உன் எஜமானுடைய சந்தோசத்திற்குள் பிரவேசி என்ற அங்கீகாரத்தையும் தருவதாகக் காணலாம்.

இன்றும் நம்முடைய வாழ்க்கையிலே , கர்த்தர் நமக்கு எத்தனையோ தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். எப்பொழுது நாம் அந்த தாலந்துகளை உண்மையும் உத்தமுமாய் கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் கட்டுமானப் பணிக்கென்றும், கர்த்தருடைய நாமம் மகிமைக்கென்றும் பயன்படுத்துகிறோமோ, அப்பொழுது கர்த்தர் நாம் செய்கிற எல்லா காரியங்களிலும் 100 சதவிகித ஆசிர்வாதத்தையும் , மனமகிழ்ச்சியையும் கொடுத்து நம்மை ஆசிர்வதிக்கிறார்.

லூக்கா 15ம் அதிகாரத்தில், 100 ஆடுகளை வைத்திருந்த ஒரு மனிதன் ஒரு ஆட்டைத் தொலைத்து விடுகிறான். 99 ஆடுகள் கொடுத்த சந்தோசத்தைக் காட்டிலும் காணமற்போன ஒரு ஆடு மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியது. அதைப் போலவே , கர்த்தரிடத்திலிருந்து எத்தனையோ ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட நமக்கு , இழந்துபோன ஏதோ ஒன்று மிகுந்த மனவருதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம். இன்று கர்த்தர் சொல்லுகிறார்,
**இழந்து போன அதே இடத்திலிருந்து உன்னை இரட்சிப்பேன் :** உன் இழப்பிற்கு ஈடு செய்வேன்".

நம்முடைய தேவனாகிய கர்த்தர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே இவ்வுலகத்திற்கு வந்தார். நாம் சிறுமைப்பட்ட நாட்களுக்கும், துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் நமக்கு மகிழ்ச்சியைத் தரக் காத்திருக்கிறார் (சங்கீதம் 90) நாம் செய்ய வேண்டியதெல்லாம், இழந்து போன அந்த நன்மையைப் பெற முயற்சி செய்ய வேண்டும். மேலும் , நம்முடைய கண்களுக்கு முன்பாக எத்தனையோ மக்கள் தேவ சமூகத்தை விட்டு வழி விலகிப் போனதைக் காண்கிறோம். அவர்களை எல்லாம் மறுபடியும் ஆண்டவருடைய மந்தைக்குள் சேர்க்கக் கூடிய உன்னத ஊழியத்தை யும் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் , மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த மன மகிழ்ச்சி உண்டாகிறதே.

**2.பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கச் செய்வேன்:**

* இதுவரை சிறைப்பட்டு , தாழ்த்தப்பட்டு, கட்டுண்டு கிடந்த நம்மை மீட்கும்படி, ஆண்டவர் உன்னதத்திலிருந்து இறங்கி வந்து சிலுவையிலே தன் ஜீவனைக் கொடுத்தார். யாரெல்லாம் அந்த சிலுவையை நோக்கிப் பார்கிறார்களோ அவர்களெல்லாரும் உயர்த்தப்படுவார்கள்.

* நான் தாழ்ந்த நிலையில் இருக்கிறேனே என்று ஒருவரும் கலங்கத் தேவையில்லை. உலகத்தாரால் உயர்ந்த பர்வதமாக கருதப்பட்ட

பாசானைப் புறக்கணித்து எருசலேமைத் தன்னுடைய வாசஸ்தலமாக தெரிந்து கொண்ட தேவன் , பெரிய பட்டணங்களைப் புறக்கணித்து யூதேயாவிலே மிகச் சிறிய பெத்லகேமைத் தெரிந்து கொண்ட தேவன் , அரண்மனையைப் புறக்கணித்து மாட்டுக் கொட்டகையைத் தெரிந்து கொண்ட தேவன் நம்முடைய தாழ்மையிலிருந்து நம்மை உயர்த்த வல்லவராயிருக்கிறார்.

* உபாகமம் 32 : 11 ல் ஒரு உவமை கூறப்பட்டுள்ளது. கழுகானது தன் கூட்டைக் கலைத்து , தன் குஞ்சுகளை எடுத்து , தன் செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு போகிறது. அதைப் போலவே , நாம் எவற்றிற்க்கெல்லாம் சிறைப்பட்டுக்கிடக்கிறோமோ, அத்தகைய சிறையைக் கலைத்து , அவருக்குள் நம்மை சிறையாக்கி (சங்கீதம் 68 : 18), நம்மை தம்முடைய செட்டைகளின் மேல் சுமந்து கன்மலையின் மேல் நிறுத்தி அவரைப் போலவே, அவருடைய சாயலாகவே நம்மை மாற்றுகிறார். பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கச் செய்வேன் என்பதன் உண்மையான பொருள் , நாம் தேவனுடைய சாயலாகவே மாறுகிற ஒரு உன்னத அனுபவம் ஆகும்.

**3.யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னை போஷிப்பேன்:**


தன் சகோதரனாகிய ஏசாவிற்கு பயந்து , தன் மாமனிடத்திற்கு ஓடிப் போகிற வழியிலே, கர்த்தர் யாக்கோபிற்கு கொடுத்த ஒரு வாக்குத்தத்தம், "நான் உன்னோடே இருந்து , நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்திற்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன் ; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை" ஆதி 28 : 15

இந்த வாக்குத்தத்தின்படியே , யாக்கோபு சென்ற இடங்களிலெல்லாம் கர்த்தர் கூடவே இருந்து , எல்லா விதங்களிலும் அவனை ஆசீர்வதித்து (மனைவி, குழந்தைகள், பணிவிடைக்காரர்கள், கால்நடைகள், ஆஸ்தி), தான் வாக்களித்தபடியே, மறுபடியும் தன் சொந்த தேசத்திற்கு யாக்கோபை திரும்பி வரப் பண்ணுகிறார். திரும்பி வருகிற வழியிலே , தனக்கு உண்டான யாவையும் "யாப்போக்கு" என்ற ஆற்றைக் கடக்கப் பண்ணி , அக்கறைப்படுத்தினான். கர்த்தர் கொடுத்த வாக்குதத்தம் முழுமையாக நிறைவேறிவிட்ட இந்த தகுணத்திலே , இனி கர்த்தர் தன்னோடு எவ்வாறு இடைப்படுவார்? தன் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் ? என்ற பயத்தோடு கூட ஆற்றின் இப்புறத்திலே யாக்கோபு பிந்தித் தனித்திருக்கிறான். அந்த சூழ்நிலையில் "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்

(ஆதி 3 2 : 26) " என்று கர்த்தரோடு போராடிய யாக்கோபை கர்த்தர் ஆசீர்வதித்து,
"இனி நீ , யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படுவாய் (ஆதி 32: 28)"
எனக் கூறி ஆசீர்வதித்தார். இஸ்ரவேல் என்பதற்கு 'கர்த்தருடைய ஜனம்' என்று அர்த்தமாம்.
இன்றும் யாக்கோபைப் போல , நம்முடைய எதிர்காலத்தைக் குறித்துக் கலங்கிக் கொண்டிருக்கிற நமக்கு கர்த்தர் , யாக்கோபுடைய சுதந்தரமான 'கர்த்தருடைய ஜனம்'என்ற புதிய நாமத்தை தரிப்பிக்கிறார்.

ஏசாயா 58 : 14 ல் கர்த்தர் நமக்கு வாக்களித்த இந்த 3 நன்மைகளையும் பெறத்தக்கதாக கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிற ஒரு காரியம்,
'என் பரிசுத்த நாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி , உன் வழிகளின் படி நடவாமலும் , உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும் , உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வு நாளை மனமகிழ்ச்சியின் நாளன்றும் , கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் எண்ணுவாயாக' ஏசாயா 58 : 13

## CARTOON OF THE MONTH



# *செயலரிடமிருந்து……*

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான உடன் விசுவாசிகளே, இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த நாட்களில் தேவனுடைய கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தியதை நினைத்து நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு நன்றிசெலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற ஒவ்வொரு ஊழியங்களையும் தேவன் ஆசீர்வாதமாக்கி தந்தமைக்காக அவருக்கு மீண்டுமாக நன்றிகளை ஏறெடுப்போம்.

குறிப்பாக 9-12-16 ல் நடைபெற்ற சிறுவர் நிகழ்வுகள். 16-12-16 ல் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கீதஆராதனை 23-12-16 ல் நடைபெற்ற கிறிஸ்துமஸ் மரவிழா மற்றும் குடும்பபாடல் ஆராதனை ஆகியவை சிறப்பாக நடைபெற உழைத்த, உதவிசெய்த ஒவ்வொருவருக்கும் என் உளமார்ந்த நன்றிகள். மேலும் இந்தப்பணிகளை பொறுப்பேற்று செயல் படுத்திய ஒவ்வொருவருக்கும் என் உளமார்ந்த நன்றிகள்.

மேலும் நமது சபையின் கிறிஸ்துமஸ் கீதஆராதனையில் கலந்துகொண்ட பிறதிருச்சபையின் ஒவ்வொரு போதகர்கட்கும் சபைக்குழு அங்கத்தினர்க்கும் சபையின் மக்கள் அனைவர்க்கும் கூட நமதுசபையின் சார்பில் நன்றிகளை உரித்தாக்குவோம்.

தொடர்ந்துவரும் நாட்களில் திருச்சபையின் வளர்ச்சிக்காக செயல் படுத்தும் ஒவ்வொரு காரியங்களிலும் நாம் யாவரும் உற்சாகத்தோடும், ஜெபத்தோடும் பங்குபெறுவோம், செயல்படுவோம். தேவன் தாமே நம்மையும், நம் திருச்சபையையும் இந்த புதிய வருடத்தில் புதிய ஆசீர்வாதங்களோடும் கிருபையோடும் கூட நன்மையான பாதைக்கு நேராக வழிநடத்துவாராக.

**M.நேசமணி**

# Some Interesting Facts About the Bible

## THE BIBLE

LEVITICUS - This book gets its name from Levi, one of the twelve sons of Jacob. It was the
priestly tribe. It had the duties of carrying out the rites and ceremonies in the tabernacle,
including the offering of animal sacrifices.

NUMBERS - This book continues with the law. It gets its name from the two numberings of the children of Israel. The experiences of the Israelites as they wandered in the wilderness for 40 years are recorded in this book. It tells about their crossing the Jordan River into the Promised Land.

DEUTERONOMY - After the Israelites wandered in the wilderness for 40 years, they were
ready to enter the Promised Land. Moses was not permitted to enter the Promised Land because he failed to honor God when he brought forth water from the rock. It warned the people what their fate would be if they departed from God's law. He also told them of the blessings if they were faithful in keeping the law. Deuteronomy includes several of Moses' speeches.

## BOOKS OF HISTORY

Joshua
Judges
Ruth
1 and 2 Samuel
1 and 2 Kings
1 and 2 Chronicles
Ezra
Nehemiah
Esther

JOSHUA - This book was named for one of the two spies (Joshua and Caleb) who went into the land of Canaan to spy out the land. He later took the place of

*Moses in leading the children of Israel into the Promised Land. He led them across the Jordan River and conquered the Canaanites. Joshua admonished the people to honor God.*

*<u>JUDGES</u> - The Israelites settled in the land of Canaan and they repeatedly disobeyed and departed from God. As they repented and turned back to God, He gave them leaders who delivered them. These leaders were called Judges and there were 15 of them.*

| | | | | |
|---|---|---|---|---|
| 1.Othniel | 2. Abimelech | 3. Elon | 4. Ehud | 5. Tola |
| 6. Abdon | 7. Shamgar | 8. Jair | 9. Samson | 10. Deborah |
| 11. Jephthah | 12. Eli | 13. Gideon | 14. Ibzan | 15. Samuel |

*<u>RUTH</u> - The book of Ruth is a love story from the time of the Judges. This love story gives a picture of the life and customs of the common people during a violent period of the Judges. Ruth was a Moabite and married one of Naomi's sons. One of the most beautiful passages in the Bible records what Ruth said to Naomi after their husbands had died and Naomi was planning to return to Bethlehem. "Entreat me not to leave thee, or to return from following after thee: for whither thou goest, I will go; and where thou lodgest, I will lodge: thy people shall be my people, and thy God my God: Where thou diest, will I die, and there will I be buried: the Lord do so to me, and more also, if ought but death part thee and me." (Ruth 1:16,17) Ruth later married Boaz, and it was through this lineage that Christ was born.*

*<u>1 and 2 SAMUEL</u> - These books tell the story of God's people under the leadership of Eli and Samuel. Samuel was the last judge. The people became dissatisfied and wanted a king like other nations. So, as God directed, Samuel anointed Saul as the first king of Israel. After Saul's death, David became the next king. David was a man "after God's own heart." These two books cover the life of David.*

*<u>1 and 2 KINGS</u> - These two books continue the history of the people of Israel, the crowning of Solomon as king, and the carrying away of the people into captivity. They tell about the dividing of the kingdom: the northern kingdom*

*which was Israel and the southern kingdom which was Judah. Israel and Judah were captured and taken from their land into foreign captivity. Later the tribes of Benjamin and Judah were restored to their Promised Land.*

*1 and 2 CHRONICLES - These two books give basically the same account of the history found in 1 and 2 Kings.*

*EZRA - This book tells about the Israelite people in Babylon as they return to Jerusalem, and the rebuilding of the temple. The rebuilding of the temple was hampered by the spiritual condition of the people.*

*NEHEMIAH - Nehemiah was a cupbearer to King Artaxerxes. He gives more history of this time period of restoration. He was a strong leader and under his leadership, important religious and social reforms were accomplished.*

*ESTHER - This book tells about what was happening to the Jews (people of Judah) during their exile. It is about a Jewish girl who later became queen of the Persian empire. The book of Esther is read with much interest. It shows the providence of God.*

*To be continued …*

*(Next topic – Books of Poetry)*

*To God be the Glory*

*Irish Prabhu*

**Epiphany**

January 6 has long been the date the Western church has observed the Feast of the Epiphany. From the Greek for “appearance” or “manifestation” (*epiphaneia*),

Epiphany celebrates the appearance of the Son of God among us as one of us — both fully divine and fully human — and marks the end of “the twelve days of Christmas” that begin December 25.

**நாம்கர்த்தரைவிடுதலையோடும், உண்மையோடும்ஆராதித்து. தேவ ஆசீர்வாதத்தை உடன்படிக்கை ஆராதனையில் பெற்றுக்கொள்ளுவோம்.**

**யோசுவா 24-15 நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்.**

# செபெதேயுவின் குமாரர்களின் தாயார்

இயேசு அவளை நோக்கி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் அதற்கு அவள் உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்ய வேண்டும் என்றாள். மத்தேயு 20:21

செபெதேயுவின் குமாரருடைய தாய் இயேசுவிடம் தன் குமாரரோடு வந்து பணிந்து விண்ணப்பம் பண்ணினார்கள். இயேசு உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கும் போது உம்முடைய ராஜயத்தில் ஒருவன் வலதுபுறத்திலும், ஒருவன் இடதுபுறத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என்கிறாள். அதே பிரகாரமாய் சீஷர்களில் யாக்கோபு முதலாவதும் யோவான் கடைசியாக தேவ இராஜ்யத்தில் பங்கடைந்தார்கள்.

செபெதேயுவின் குமாரரின் தாயைப் போல நாமும் கூட நம் பிள்ளைகள் கண்டிப்பாக தேவ ராஜ்யத்தில் பங்கு பெற வேண்டும் என்ற ஆவலோடு ஜெபிக்கவேண்டும். இந்த உலகத்தில் நாம் நம் பிள்ளைகளுக்கு எவ்வளவு சொத்து சேர்க்கிறோம் என்பதைவிட மேன்மையானது என்றென்றைக்கும் அழியாத தேவ ராஜ்யத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்க நாம் நம் தேவனிடம் எப்படி பணிந்து மன்றாடுகிறோம் என்பதே. அன்பானவர்களே , நம் பிள்ளைகள் பரலோகத்தில் பங்கடைவார்கள் என்ற விசுவாசம் நமக்கு உண்டா?

யோவான் ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். மத்தேயு 11:12

**உம் நல்லழைப்பைக் கேட்டதும், யாக்கோபு அப்போஸ்தலன் தன் தந்தை வீட்டை நீங்கியும், உம்மைப் பின்பற்றினான்.** அது போல் நாங்களும் உம்மைப் பின்பற்றவும் எங்களுக்கு உதவி செய்யும். இதுவே நம் ஜெபமாகவும் இருக்கட்டும்.

Mrs.ஜெனிபர் டேவிட்சன்

# Birthday Celebrants in January – 2017

| Date | Name | Mob.No |
|---|---|---|
| 08.01.2017 | Master.Roshan | 0529920722 |
| 12.01.2017 | Master.Geovin | 0562900809 |
| 16.01.2017 | Master. Abinesh Solomon | 0556763719 |
| 18.01.2017 | Mr. John Joseph | 0502455266 |
| 19.01.2017 | Master. Derik | 0505432630 |
| 20.01.2017 | Master. Abisheik Solomon | 0556763719 |

# Wedding Anniversary in January – 2017

| Date | Name | Mob.No |
|---|---|---|
| 05.01.2017 | Mr. Jayan Dharmaraj<br>Mrs. Helen Hema bai | 0552498186 |
| 11.01.2017 | Mr. Belfer John<br>Mrs. Jeyantha | 0557309275 |
| 14.01.2017 | Mr. Samuel Selvamony<br>Mrs. Aruna | 0504934806 |
| 23.01.2017 | Mr. T.D.J.Prem Kumar<br>Mrs. Prem Ruth | 0508507652 |
| 30.01.2017 | Mr.Sathish Kumar<br>Mrs.Sinduja | 0558146143 |

.




Dear Children, please find these words and circle them, cut this puzzle and hand over to Pastor Uncle on or before 20th January 2017.

**<u>Congrats you have done all</u>**

1) Eastrine 2) Joshika varshini
3) Joshua 4) Annlin Sophia Nelson
5) Shelbino 6) Mercy
7) Diniya Sunshine 8) Dennis Roger
9) Angelin Sophia Nelson 10) Merwin Samuel
11) Jesvin 12) Roshan 13)Gain 14)Kevin

# Daily Bible Reading January – 2017

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங். 1 : 2)

| Date | Day | Morning | | Evening | |
|---|---|---|---|---|---|
| 1 | Sun | Numbers.21 | எண்ணாகமம்.21 | 1Timo.1 | 1தீமோத்தேயு.1 |
| 2 | Mon | Numbers.22 | எண்ணாகமம்.22 | 1Timo.2 | 1தீமோத்தேயு.2 |
| 3 | Tue | Numbers.23 | எண்ணாகமம்.23 | 1Timo.3 | 1தீமோத்தேயு.3 |
| 4 | Wed | Numbers.24 | எண்ணாகமம்.24 | 1Timo.4 | 1தீமோத்தேயு.4 |
| 5 | Thu | Numbers.25 | எண்ணாகமம்.25 | 1Timo.5 | 1தீமோத்தேயு.5 |
| 6 | Fri | Numbers.26 | எண்ணாகமம்.26 | 1Timo.6 | 1தீமோத்தேயு.6 |
| 7 | Sat | Numbers.27 | எண்ணாகமம்.27 | 2Timo.1 | 2தீமோத்தேயு.1 |
| 8 | Sun | Numbers.28 | எண்ணாகமம்.28 | 2Timo.2 | 2தீமோத்தேயு.2 |
| 9 | Mon | Numbers.29 | எண்ணாகமம்.29 | 2Timo.3 | 2தீமோத்தேயு.3 |
| 10 | Tue | Numbers.30 | எண்ணாகமம்.30 | 2Timo.4 | 2தீமோத்தேயு.4 |
| 11 | Wed | Numbers.31 | எண்ணாகமம்.31 | Titus.1 | தீத்து.1 |
| 12 | Thu | Numbers.32 | எண்ணாகமம்.32 | Titus.2 | தீத்து.2 |
| 13 | Fri | Numbers.33 | எண்ணாகமம்.33 | Titus.3 | தீத்து.3 |
| 14 | Sat | Numbers.34 | எண்ணாகமம்.34 | Philemon.1 | பிலேமோன்.1 |
| 15 | Sun | Numbers.35 | எண்ணாகமம்.35 | Hebrews.1 | எபிரெயர்.1 |
| 16 | Mon | Numbers.36 | எண்ணாகமம்.36 | Hebrews.2 | எபிரெயர்.2 |
| 17 | Tue | Deuteron.1 | உபாகமம்.1 | Hebrews.3 | எபிரெயர்.3 |
| 18 | Wed | Deuteron.2 | உபாகமம்.2 | Hebrews.4 | எபிரெயர்.4 |
| 19 | Thu | Deuteron.3 | உபாகமம்.3 | Hebrews.5 | எபிரெயர்.5 |
| 20 | Fri | Deuteron.4 | உபாகமம்.4 | Hebrews.6 | எபிரெயர்.6 |
| 21 | Sat | Deuteron.5 | உபாகமம்.5 | Hebrews.7 | எபிரெயர்.7 |
| 22 | Sun | Deuteron.6 | உபாகமம்.6 | Hebrews.8 | எபிரெயர்.8 |
| 23 | Mon | Deuteron.7 | உபாகமம்.7 | Hebrews.9 | எபிரெயர்.9 |
| 24 | Tue | Deuteron.8 | உபாகமம்.8 | Hebrews.10 | எபிரெயர்.10 |
| 25 | Wed | Deuteron.9 | உபாகமம்.9 | Hebrews.11 | எபிரெயர்.11 |
| 26 | Thu | Deuteron.10 | உபாகமம்.10 | Hebrews.12 | எபிரெயர்.12 |
| 27 | Fri | Deuteron.11 | உபாகமம்.11 | Hebrews.13 | எபிரெயர்.13 |
| 28 | Sat | Deuteron.12 | உபாகமம்.12 | James.1 | யாக்கோபு.1 |
| 29 | Sun | Deuteron.13 | உபாகமம்.13 | James.2 | யாக்கோபு.2 |
| 30 | Mon | Deuteron.14 | உபாகமம்.14 | James.3 | யாக்கோபு.3 |
| 31 | Tue | Deuteron.15 | உபாகமம்.15 | James.4 | யாக்கோபு.4 |

# WORSHIP TIMINGS – JANUARY - 2017

## MAIN WORSHIP HALL

## OASIS HOSPITAL COMPOUND,AL AIN.

| | | |
|---|---|---|
| 1st & 3rd FRIDAYS | 7.00 pm | COMMUNION SERVICE |
| 2nd & 4th FRIDAYS | 7.00 pm | EVENING SERVICE |
| 2nd & 4th FRIDAYS | 6.30 pm | BIBLE STUDY |
| EVERY FRIDAYS | 6.30 pm | JUNIOR CHURCH |

## PARSONAGE, AL MUWAIJI

| | | |
|---|---|---|
| 06.01.2017 FRIDAY | 11.30 am | FASTING PRAYER |
| 14.01.2017 SATURDAY | 07.30 pm | WOMEN'S PRAYER CELL |
| 21.01.2017 SATURDAY | 07.00 pm | MEN'S PRAYER & CAMP MINISTRY |
| 31.01.2017 TUESDAY | 11.30 pm | MONTH END PRAYER |

## *வேத வினா விடைப் போட்டி – 26 ( ஜனவரி )*

**( 2சாமுவேல்.13-24 அதி.)**

1. ஆயாவின் குமாரத்தி யார்?
2. யோனத்தானும் அகிமாசும் எங்கே ஒளிந்து கொண்டார்கள்?
3. அப்சலோம் ராஜாவின் முகத்தைக் காணாமல் எத்தனை வருடம் எருசலேமில் குடியிருந்தான்?
4. உம்மைப் பகைக்கிறவர்களை சிநேகித்து, உம்மைச் சிநேகிக்கிறவர்களை பகைக்கிறீர் என்று சொன்னது யார்?
5. செத்தாலும் பிழைத்தாலும் உடனிருப்பேன் என்று சொன்னது யார்?
6. தாவீது நியமித்த அதிபதிகளுக்கு கட்டளையிட்டது என்ன?
7. தாவீதின்மேல் கற்களை எறிந்தவன் யார்?

8. தாவீதுக்கு இருந்த மூன்று பலசாலிகள் யார்?
9. யோவாபின் நிலத்திற்கு தீக்காளுத்திப் போட்டது யார்?
10. நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்கவேண்டியது என்ன என கேட்டது யார்?

**குறிப்பு :** விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இந்த ஜனவரி மாதம் 20–ஆம் தேதிக்கு முன் ஆயருக்கு அனுப்பி வைக்கவும்.

## டிசம்பர் **மாத விடைகள்**

1. 2சாமுவேல்.7:15
2. 2சாமுவேல்.4:2
3. 2சாமுவேல்.8:16
4. 2சாமுவேல்.8:13
5. 2சாமுவேல்.2:11
6. 2சாமுவேல்.5:7
7. 2சாமுவேல்.12:13
8. 2சாமுவேல்.1:18
9. 2சாமுவேல்.9:8
10. 2சாமுவேல்.6:23

## டிசம்பர் (2016) மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்

1. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
2. திருமதி. பிப்லின் நெல்சன்
3. திருமதி. ஹெலன் கம்பீரம்
4. திருமதி. ஷீபா பிரகாஷ்
5. திருமதி. ஜெயின் ராஜவேல
6. திருமதி. ஜரிஷ் பிரபு
7. திருமதி. ஜெயந்தா பெல்வர்
8. திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

## சுவிசேஷ ஊழியம்

நமது திருச்சபையால் தாங்கப்படும் DMPB மிஷனரிகள்

மிஷனரி:**திரு.P.சூரிபால் சதா**

பணித்தளம்:நீலமங்கலம் வட்டாரம்:மாத்தூர்

**துதி செலுத்த வேண்டிய நிகழ்வுகள்:**

- ஜான் பீட்டர் கால் புண்ணிலிருந்து கர்த்தர் சுகம் தந்ததற்காக துதிப்போம்.
- ஆனந்தனுக்கு கிடைத்த விடுதலைக்காக துதிப்போம்.
- ராஜ் திருமணத்தில் இருந்த தடை நீங்கியதற்காக துதிப்போம்.
- திருமதி.அயம்புகனி ஆசிரியைக்கு பணியிட மாற்றத்திற்காக வேலை கிடைத்ததற்காக துதிப்போம்.

**ஜெப வேண்டுகோள்:**

- நெஞ்சுவலியினால் பாதிக்கப் பட்டிருக்கும் கண்ணனுக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.
- தண்டலை, பூவரசு, அஜீத், தாமோதரன் ஆகியோர் ஆலயம் வர ஜெபிப்போம்.
- தண்டலை, நீலமங்கலம், பெருவங்கூர் கிராம மக்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- கருணாபுரத்தில் ஜெபம் நடத்த வாடகை இடம் கிடைக்க ஜெபிப்போம்.

மிஷனரி:**திரு.Rகிறிஸ்டோபர்**

பணித்தளம்:உள்சக்கடி வட்டாரம்:குருகிலாமூர்

**துதி செலுத்த வேண்டிய நிகழ்வுகள்:**

- ஊழியத்தில் ஆண்டவர் தந்துவரும் வழிகாட்டுதலுக்காக, பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

**ஜெப வேண்டுகோள்:**

- இருசக்கர வாகன விபத்தில் காயமடைந்த கோவிந்தராஜுக்கு பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.
- பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிற ராஜ் சுகத்திற்காக ஜெபிப்போம்.
- அமுதாவிற்கு இழுப்பு வியாதி சுகமாக ஜெபிப்போம்.

## *சிந்தனைக்கு.........*

## எலியாவோடு இருந்த எலிசா

**“சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு”(1 இராஜா. 19:16).**

‘‘அப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய், பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலியாவைக் கண்டு, அவன்மேல் தன் சால்வையைப் போட்டான். அந்தநேரம் முதல் அவன் எழுந்து, எலியாவுக்குப் பின் சென்றுஊழியம் செய்தான்’’(1இராஜா. 19:19,20). தகப்பனும் பிள்ளையும் போல, குருவும் சீஷனும் போல அவர்கள் ஊழியம் செய்தார்கள்.

சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள், எலிசா ஏறக்குறைய பதினான்கு ஆண்டுகளாக எலியாவோடு கூட இருந்து, ஊழியத்தைக் கற்றுக்கொண்டார். புகழுக்காகவோ, பணத்துக்காகவோ, செல்வாக்குக்காகவோ எலிசா தன் மனதை மாற்றிக் கொள்ளவில்லை. அந்த பதினான்கு வருடங்களும் எலிசாவின் உள்ளத்திலே, ‘‘ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்’’என்ற தாகம் மட்டுமே இருந்தது எனலாம். ஆவியானவரின் வழி நடத்துதல் இருந்தால் மட்டுமே ஜனங்களுக்கு நன்மை செய்யமுடியும் கர்த்தரேதேவன் என்று ஆர்ப்பரிக்கமுடியும் ஜனங்களை கர்த்தர் காட்டும் பாதையிலே வழி நடத்தமுடியும் என்பதை உணர்ந்துகொண்டார்.

டி.எல்.ஆஸ்பார்ன்(T.L.Osborn) என்ற வல்லமையான தேவமனிதர், பிலிப்பைன்ஸ் தேசத்திற்கு ஊழியத்திற்கு சென்றபோது, அங்கே ஒரு இளம் வாலிபன் பகலெல்லாம் எல்லாவித்திலும் அவரோடு கூட இணைந்து ஊழியம் செய்தான். இரவிலே அவர் படுக்கைக்குச் சென்றபின்பு, இந்தவாலிபன் முழங்காற்படியிட்டு அந்த தேவமனிதன் மேலிருக்கிற ஆவியின் வரமும் வல்லமையும் தன் மேலும் இறங்கிவரவேண்டும் என்று கண்ணீரோடு ஜெபம் பண்ணினான். டி.எல்.ஆஸ்பர்ன் ஊழியத்தை முடித்து, அமெரிக்கா சென்றபின்பு, பிலிப்பைன்ஸ் தேசத்தில் ஒரு பெரிய எழுப்பதலை உண்டாக்கும் கருவியாக தேவன் அவனை எழுப்பினார்.

எலியா பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது எலிசாவை நோக்கி: "நான் உன்னைவிட்டு எடுத்துக் கொள்ளப்படுமுன்னே நான் உனக்கு செய்ய வேண்டியது என்ன, கேள் என்றார். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான்"(2இராஜா.2:9). எலியாவோடு எலிசா எப்பொழுதும் இருந்தபடியால், எலியாவின் மேலிருந்த ஆவியின் வரம் இரட்டிப்பாய் எலிசாவுக்குக் கிடைத்தது. எலியாவின் மேலிருந்த சால்வையை எடுத்து யோர்தானை அடித்தபோது, யோர்தான் இரண்டாகப் பிரிந்தது. எலியா தன் வாழ்நாளிலே ஏழு அற்புதங்களைச்செய்தார். ஆனால் எலிசாவோ பதினான்கு அதிசயங்களைச் செய்தார். எலியாவின் எலும்புபட்ட ஒருவரும் உயிரோடு எழும்பவில்லை ஆனால் எலிசாவின் எலும்புபட்டு ஒருவன் உயிரோடு எழும்பினான். (2இராஜா. 13:21). இது எப்படி நடந்தது? எலிசா எலியாவோடு கடைசிவரை உண்மையும் உத்தமுமாய் இருந்ததினால் மாத்திரமே.

உலகப்பிரகாரமான தகப்பன் எலிசாவுக்கு இருந்தும் எலியாவையே தன்னுடைய ஆவிக்குரிய தகப்பனாகக் கொண்டிருந்தார். எலியா எங்குசென்றாலும் நிழல் போல் பின்பற்றிக் கொண்டே இருந்தார். எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது "என் தகப்பனே என் தகப்பனே இஸ்ரவேலுக்கு ரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே என்று புலம்பினார்"(2இராஜா.2:12). ஆகவே கர்த்தர் அவருக்கு இரட்டிப்பான ஆவியின் வரம் கொடுத்தார் என்றுவேதம் கற்பிக்கிறது.


**"நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும், உம்முடைய ஜீவனையும் கொண்டுசொல்லுகிறேன் என்றான். அப்படியே இருவரும் பெத்தேலுக்குப் போனார்கள்." (2இராஜா. 2:2)**

ஆம் கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான தேவனுடைய பிள்ளைகளே நாமும் எலியாவை விடாமல் பின்தொடர்ந்த எலிசாவைப் போல் தேவனைத் தொடர்ந்து அவரோடு கூட நடைபோடுவோம். தேவன் இந்த புதிய வருடத்தில் இரட்டிப்பான ஆசீர்வாதங்களால் நம்மை முடிசூட்டி வழிநடத்துவார்.

*M. Nesamony*

# YOUTH- CROSSWORD PUZZLES

## *The Law of Moses*




**ACROSS**

1 The Ten Commandments were given on ____________ _____________ (Exod. 34:29) Draw a heart in the last square.

3 The ________ covering various parts of an animal's insides were to be burned on the altar (Exod. 29:13)

6 Sacrificial animals had to _____ to take the punishment for people's sins.

9 There were over 600 of ______ _______ in the Law of Moses. (Exodus, Leviticus, Numbers, Deuteronomy)

11 Every law was a ___________________________ of God, not a suggestion.

14 Exodus 23:14 says thr____ times a year they were to

keep special feasts to God.
15 Remember the Sabbath Day to keep it holy (Deut. 5:12) was ____ Saturday.
16 On the Sabbath, ___ ____ks were to be done.
19 After Moses broke the Ten Commandment tablets upon seeing the people sin, he went _______ up Mt. Sinai where God wrote the _______ Commandments on two new tablets.
21 Moses appointed Aaron to be the high priest. Aaron was _____ brother. (Exod. 28:1; 31:10).
22 God told Moses to tell Pharaoh, "Let my ______ go" (Exodus 4:23)
23 Burnt offerings for people's sins were to RE_________ on the _____________ ___ burn all night.

**DOWN**
2 One of the 10 Commandments is "You _______ _____ _________" (Exod. 20:13).
4 The Israelites wandered the wilderness for 40 years, one year at __ __________ (Deut. 29:5).
5 Some sacrifices in the Law of Moses were offered for ____anksgiving.
6 God sent a Deadly plague of locusts on Egypt. Then he sent a strong West Wind to get rid of the locusts The initials the plague and the kind of wind are __ __
7 Moses, Aaron and his sons saw God in heaven (Exodus 24:9-11). After this event, each one told people, " ____ have ______ God."
8 Another word for special law is D__________.
10 Another of the 10 Commands was not to bow down to idols (Exodus 20:4) because they are ___ _______.
12 To help build the tabernacle, ________ ___ well as women took free-will offerings (Exodus 35:29).
13 Because God dictated to Moses all those 600 plus laws for the Israelites to obey, the Old Testament Law is usually called the Law of ___________________ (Malachi 4:4).
17 The Israelites were told they could ___cupy a land belonging to evil people (Leviticus 20:24).
18 Burnt offerings were to be presented to the priest___

the entrance to the Tabernacle (Leviticus 3:3).
19 They were to ________ various laws on their hands and foreheads to help keep them reminded (Deut. 6:8).
20 "______ prophet has risen in Israel like Moses whom the Lord knew face to face" (Deut. 34:10).

## Congrats who have done all

*Sherin Carol* D.P. Joseph Jovin

## கோதுமை மணிகள் - வெல்லஸ்லி பெய்லி

பதினெட்டாம் நூற்றாண்டின் கொடிய நோயாக கருதப்பட்ட தொழுநோயை இன்றைக்கு நமது சமுத்யத்தில் காணபது அரிது.. ஒரு காலத்தில் சமுதாயம் இவர்களை ஊருக்கு வெளியே தள்ளி வைத்திருந்தது. ஆனால் இன்றைக்கு தொழுநோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களை நமது சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறோம். உண்மையாகவே நமது சமுதாயத்தில் நல்ல மாற்றம் ஏற்ப்பட்டுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. இந்த மாற்றத்திற்கு யார் காரணம்? இயேசுவின் அன்பால் ஈர்க்கப்பட்ட மிஷனரிகளே காரணம் என்றால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட ஒரு மிஷனரியின் வாழ்க்கை வரலாறு.

### வெல்லஸ்லி பெய்லியின் இளமை வாழ்க்கை

வெல்லஸ்லி பெய்லி (Wellesley Bailey) அயர்லாந்து தேசத்தில் அபேலெய்க்ஸ் (Abbeylieux) என்னும் ஊரில் 1846 ம் வருடம் ஏப்ரல் 28 ம் தேதி நில அதிபருக்கு மகனாக பிறந்தார். உலக பிரகாரமாகவும் உல்லாசமாகவும் வாழ்வதையே தனது நோக்கமாக கொண்டிருந்தார் பெய்லி. சிறு குழந்தையாய் இருக்கையில் தொடர்ந்து சபைக்கு சென்ற பெய்லி தனது இருபதாம் வயதில் சபைக்கு செல்லும் பழக்கத்தை அறவே விட்டிருந்தார். அந்த நாட்களில் அயர்லாந்து தேசத்தில் ஏற்ப்பட்ட கடும் பஞ்சம் காரணமாக அநேகர் வெளிதேசங்களில் தஞ்சம் புகுந்தனர். 1866 ம் வருடம் பெய்லி ஆஸ்திரேலியா சென்று நன்கு சம்பாதித்து வாழ முடிவு செய்து கிரேவ்சென்ட் (Gravesend) என்ற

துறைமுக நகருக்கு சென்றார். அவர் செல்ல வேண்டிய கப்பல் பனிமூட்டம் காரணமாக பல தாமதமானது. அந்த சமயம் பெய்லியின் சிறுவயது தோழியான அலைஸ் கிரகாம் (Alice Grahame)சொல்லிய "நேரம் கிடைக்கும் பொழுது கட்டாயமாக சபைக்கு செல்" என்ற வார்த்தை அவருக்கு நினைவுக்கு வந்தது. அந்த பகுதியில் இருந்த சபையின் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டார். அன்றைய செய்தி வேளையில் கூறிய, "குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி,அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும்,கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்" (ஏசாயா42:16) என்ற வசனம் பெய்லியை அதிகமாய் அசைத்தது. சிறு குழந்தையாய் இருக்கையில் சபைக்கு சென்றிருந்தாலும் இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றிராத பெய்லி அன்றைக்கு கர்த்தர் தன்னோடு பேசுவதை உணர்ந்தார். மேக மூட்டம் களைய கப்பலில் ஆஸ்திரேலியாவை நோக்கி புறப்பட்டார்.

## வெல்லஸ்லி பெய்லியின் இந்திய பயணம்

ஆஸ்திரேலியாவில் இரண்டு வருடம் கடினமாக உழைத்தும் லாபம் ஒன்றும் காணமுடியவில்லை. ஏமாற்றத்துடன் அயர்லாந்து திரும்பினார் பெய்லி. தன்னை கிறிஸ்து அவரது பணிக்காய் முன்குறித்துள்ளார் என்பதை உணர்ந்த பெய்லி, இந்தியாவில் காவல் துறையில் பணியாற்றிய தனது சகோதரனிடத்தில் செல்ல முடிவெடுத்தார். பின்னர் அமெரிக்கன் பிரஸ்பிட்டரியன் மிஷனில் (American Presbyterian Mission) சேர்ந்தார். பஞ்சாப் மாநிலத்தின் அம்பாலா என்ற ஊரில் சென்று ஆசிரியப் பணி செய்யுமாறு உத்தரவு பெற்று இந்தியா நோக்கி பயணமானார். அம்பாலா பட்டணம் இன்றைக்கு ஹரியானா மாநிலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 1869 ம் வருடம் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திற்கு வந்தார் பெய்லி. இந்தியாவில் காவல் துறையில் பணியாற்றிய தனது சகோதரன் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதால் தனி மரமாய் இந்தியாவில் காலடி எடுத்து வைத்தார். டாக்டர்.மோரிசன் (Dr JH Morrison) என்பவரோடு இணைந்து ஹிந்தி மொழியை கற்றுக்கொள்ள மிஷன் பணித்தது. டாக்டர்.மோரிசன் அம்பாலா அமெரிக்க மிஷனின் தலைவராக

இருந்தார்.அந்த நாட்களில் தொழு நோய் இந்தியாவில் அதிகளவில் பரவி இருந்தது. தொழுநோயாளிகளை சமுதாயம் ஊருக்கு புறம்பே தள்ளி வைத்திருந்தது. டாக்டர்.மோரிசன் அவர்களுக்கென சிறு குடிசைகளை ஏற்ப்படுத்தி அவர்களை பராமரித்து வந்தார். ஒருநாள் தொழுநோயாளிகள் வசிக்கும் குடிசைகளுக்கு பெய்லியையும் அழைத்து சென்றார். அதுவரை தொழுநோயாளிகளைப் பற்றி வேதத்தில் மட்டுமே வாசித்திருந்த பெய்லி, சூம்பின கைகளோடும், முகம் முழுவதும் புன்களோடும், குருடர்களாகவும் இருந்த மக்களைக் கண்டு வேதனையடைந்தார். தொழுநோய் தொற்றிக்கொண்ட மனிதர்களின் வாழ்க்கையை சீர்படுத்த இயேசு தம்மை தெரிந்து கொண்டிருப்பதை தெளிவாக உணர்ந்தார் பெய்லி. தொழுநோயாளிகளை தொடர்ந்து பராமரித்து வந்த பெய்லி, 1871 ம் வருடம் அக்டோபர் மாதம் தனது சிறுவயது தோழியான அலைஸ் கிரகாம் (Alice Grahame)என்பரை திருமணம் செய்தார். இந்த திருமணம் பாம்பே கதிட்ராளில் வைத்து நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர் இருவருமாக இணைந்து தொழுநோயாளிகளை பராமரித்தனர்.

## தி லெபோரசி மிஷன் மலர்தல்

திருமணமாகி இரண்டு வருடங்களில் அலைஸ் கிரகாமின் உடல் நிலை மோசமாகிவிட்டது. இதினால் 1873 ம் வருடம் அமெரிக்க மிஷன் ஸ்தாபனத்தில் இருந்து விலகி தங்களுடைய சொந்த தேசமாகிய அயர்லாந்திற்கு பயணித்தனர் தம்பதியினர். அவர்களுடைய நினைவு முழுவதும் இந்தியாவில் தாங்கள் விட்டு வந்த தொழுநோயாளிகளை குறித்தே இருந்தது. அநேகருக்கு தொழுநோயாளிகளின் தேவைகளை குறித்து அறிவித்து அவர்களுக்கு உதவுமாறு பல முயற்சிகளை எடுத்தார் பெய்லி. அலைஸின் சிநேகிதிகளான பிம் சிஸ்டர்ஸ் வருடத்திற்கு முப்பது யூரோ தருவதாக வாக்களித்தனர். இந்நிலையில் அலைஸின் உடல் நிலையும் முன்னேறவே, 1875 ம் வருடம், அயர்லாந்தில் இருந்து மீண்டும் இந்தியா வந்து “தி லெபோரசி மிஷன்” என்ற தொழுநோயாளிகளை பாதுக்காக்கும் அமைப்பை தொடங்கினார். முப்பது யூரோ தருவதாக வாக்களித்த பிம் சிஸ்டர்ஸ்,தொழுநோயாளிகளின் தேவைகளை அறிந்து அநேகரிடம்

உதவிகளைப் பெற்று தொள்ளாயிரம் யூரோக்களை வருடத்திற்கு கொடுத்து உதவினர்.

## தொழுநோய் மிஷனின் வளர்ச்சி

1886-ம் வருடம் தமப்தியினர் இந்தியா முழுவதும் சுற்றுபயணம் செய்து தொழுநோயாளிகளின் தேவைகளை அறிந்து கொண்டனர். இந்தியாவில் தொடங்கிய பணியானது நாளடைவில் பர்மா, சீனா, ஜப்பான், தென் அமெரிக்கா, தென் ஆப்ரிக்கா, சுமத்ரா தீவுகள் மற்றும் கொரியா நாடுகளில் விரிவடைந்தது. ஒருநாளில் ஆஸ்திரேலியா சென்று நன்கு சம்பாதித்து வரமுடியாத பெய்லி, தேவனின் சித்தத்திற்கு செவி சாய்த்து நடக்கையில் தேவன் அவரை உலகம் போற்றும் அளவில் உயர்த்தினார். ஐம்பது வருடத்திற்கும் அதிகமாக தொளிநோயளிக்காக உழைத்த பெய்லி 1937 ம் வருடம் தமது தொண்ணுற்று ஒன்றாம் வயதில் இறைவனது விண்ணரசில் இணைந்தார்.

## வெல்லஸ்லி பெய்லியின் சாதனை

பதினெட்டாம் நூற்றாண்டில் உலகத்தில் 15 மில்லியனாக இருந்த தொழுநோயாளிகள் எண்ணிக்கை இத்தமபதியினர் மேற்கொண்ட பணியின் மூலமாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் 2 மில்லியனாக குறைந்தது. இன்றைக்கு முப்பதுக்கும் மேற்ப்பட்ட நாடுகளில் இயங்கும் இந்த தொழுநோயாளிகளுக்கான காப்பகத்தில் 2300 க்கும் அதிகமானோர் பணிசெய்து கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்தி வருகிறார்கள்.

## மிஷனரியின் வாழ்விலிருந்து நமது வாழ்விற்கு

ஆண்டவரே நீர் என்னை தெரிந்தெடுப்பதை உணர்ந்து உமது பணி செய்ய, உமது கரங்களில் என்னை தருகிறேன் என்று அர்பணித்து செயல்பட்ட வெல்லஸ்லி பெய்லி, உலக அளவில் தொழுநோய் பரவுதலை குறைத்து, இயேசுவின் அன்பை அதிகப்படுத்தினார். நாமும் நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவிக்காய் சாதிப்போம். ஆமேன்

**தொகுப்பு**

# *Not What It Seems*

Don't be afraid . . . . Those who are with us are more than those who are with [the enemy]. 2 Kings 6:16

Don is a border collie who lives on a farm in South Lanarkshire, Scotland. One morning, he and his owner, Tom, set out to check on some animals. They rode together in a small farm utility truck. When they arrived, Tom left the vehicle but forgot to put the brake on. With Don in the driver's seat, the vehicle rolled down a hill and across two lanes of traffic before it stopped safely. To watching motorists, it appeared the dog was out for a morning drive. Indeed, things are not always as they seem.

It seemed as if Elisha and his servant were about to be captured and carried off to the King of Aram. The king's forces had surrounded the city where Elisha and his servant were staying. The servant believed they were doomed, but Elisha said, "Don't be afraid . . . . Those who are with us are more than those who are with [the enemy]" (2 Kings 6:16). When Elisha prayed, the servant was able to see the multitudes of supernatural forces that were in place to protect them.Situations that seem hopeless are not always the way we perceive them to be. When we feel overwhelmed and outnumbered, we can remember that God is by our side. He can "command his angels . . . to guard [us] in all [our] ways" (Ps. 91:11).

*Dear God, please give me a glimpse of Your power today. Help me to believe that You are willing and able to help me in any situation I encounter.*

**Things are always better than they seem to be when we remember that God is by our side.**

# Coloring Page for Kids

Ruth 1 - Ruth & Naomi



**Congrats who have done all**

*1)Jayne 2) Erline Berniceraj 3) Eric Jayden 4)Jonathan*
*5)Geovin 6)Jeremiah*
*6)Ridhun 7) Jemima 8) Angelin steffina*

# அருளுரை தலைப்புகள் - ஜனவரி 2017

| நாள் | தலைப்பு | ப.ஏற்பாடு | நிருபம் | நற்செய்தி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06.01.2017 | தேவனுடைய ஆலயமாய் சரீரத்தை எண்ணுதல் | பிரச.6:1-12 | 1கொரி.3:16-23 | மத்.5:21-30 | 1 |
| 13.01.2017 | ஓற்றுமைக்கான அழைப்பு | எசேக்.37:-15-23 | எபே.4:1--6 | யோவா.15:1-12 | 133 |
| 20.01.2017 | ஒன்றுபட்ட விசுவாசமும், செயல்பாடும் | யோசு.3:9-17 | அப்.9:20-25 | மாற்.1:21-24 | 53 |
| 27.01.2017 | உண்மையான தேவபக்தி | மீகா.6:1-8 | யாக்.1:19-27 | மத்.6:1-8 | 42 |

# ஆராதனை பாடல்கள் - ஜனவரி 2017

## 01-01-2017

பா: – நீர் தந்த நன்மை

பா: 89 - இன்னோர் ஆண்டு

கீர்: 4 – ஆத்துமமே

கீர்:126 – ஆனந்தமே

பா: 51 – நான் பாவிதான்

பா: 8 – எல்லாருக்கும்

## 06-01-2017

பா: 63 – ஆண்டவா பிரசன்னமாகி

பு: 53 – நானும் என் வீட்டாருமோ

கீர்: 88 – இயேசு நேசிக்கிறார்

கீர்: 76 – பாவியாகவே வாரேன்

பா: 86 – தீராத தாகத்தால்

பா: - பகலோன் கதிர்

## 13-01-2017

பா: 73 – அஞ்சாதிரு என்

பு: 113 – கர்த்தனே எம்

கீர்: 15 – பாடித் துதி

கீர்: 84 – நம்பி வந்தேன்

பா: 68 – அருள்நாதா

## 20-01-2017

பா: 13 – போற்றிடு ஆன்மமே

பு: 57 – மனம் இசைந்து

கீர்: 12 – திரிமுதல் கிருபாசனனே

கீர்: 101 – வாராவினை வந்தாலும்

பா: பயத்தோடும் பக்தியோடும்

கீர்: 24 – சீர் ஏசு நாதனுக்கு